31/2817/2021

2609/21

மாவட்ட ஆய்வுக்... 03 SEP 2021 ... 632 009

வேலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறை ஆணைகள்
ஆணையிடுபவர்: திரு.ப்பி.விஜயராகவன், பி.காம்.,

ந.க.அ3/14/2021 நாள்: 09.08.2021.

பொருள்: பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சு பணித்தொகுதி - வேலூர் மாவட்ட வருவாய் அலகு - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - IV-ன் மூலம் தட்டச்சராக தெரிவு செய்யப்பட்டு வேலூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

படிக்கப் பட்டவை:
1.தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடித எண்.5526/PSD-F1/2020, நாள்: 24.12.2020.

2.கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.பணி 4(1)/20849/2019, நாள்:12.02.2021.

3.வேலூர் மாவட்ட ஆட்சியரின் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/14/2021, நாள்:19.02.2021.

*******

**ஆணை:**

வேலூர் மாவட்ட வருவாய் அலகில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தொகுதி – IV தேர்வில் தேர்ச்சி பெற்று, பார்வை 2-ன் மூலமாக வேலூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3ல் காணும் செயல்முறை ஆணையின்படி தட்டச்சராக பணிநியமனம் செய்யப்பட்டு கீழ்கண்வாறு அவருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் பணியாற்றி வருகிறார்.

| வ.எண் | தட்டச்சர் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | R.சாந்தி,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். | 24.02.2021 முற்பகல் |

2) எனவே, கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள தட்டச்சர் அவருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் இவரது பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் தட்டச்சர் பணியமைப்பில் வரண்முறை செய்தும், பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண் பருவம் துவக்கியும், இவரது தகுதிகாண் பருவம் 3 (மூன்று) ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | தட்டச்சர் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | தட்டச்சர் பணியமைப்பில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|
| 1 | R.சாந்தி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். | 24.02.2021 முற்பகல் |

3) இந்த பணிவரன்முறையானது 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய தொகுதி-IVல் அடங்கிய பணிக்கான தேர்வுகளில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிபேராணை மனுக்களின் மீது பிறப்பிக்கப்படும் தீர்ப்புரைகளுக்கு உட்பட்டது.

4) மேற்படி தட்டச்சராக பணிநியமனம் செய்யப்பட்ட நபர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கையில் தெரிவித்துள்ளவாறு, தகுதிகாண் பருவ காலத்திற்குள்ளாக கணினியில் "ஆபிஸ் ஆட்டோமேஷன் (Certificate Course in Computer on "Office Automation" awarded by Directorate of Technical Education) தொழில்நுட்ப சான்று பெற்று அசல் சான்றினை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் சமர்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

5) மேற்கண்ட நபரின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்பட்டதை தனியரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் செய்யப்பட்டது.

ஒம்/-ப்பி.விஜயராகவன்.
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
வேலூர் - 9.

/ஆணைப்படி/

அலுவலக மேலாளர் (பொது)
10/8/21

பெறுநர்
சம்மந்தப்பட்ட நபர்.

நகல்: மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர்.
நகல்: அ3 இருக்கைக்கு.

09.08.2021